www.padippakam.com

# பிரித்தானிய தமிழர் பேரவை
# BRITISH TAMILS FORUM

November 2009



முள்ளிவாய்க்கால் அவலத்தின் உச்சத்தில் தமிழீழ ஓவியர் ராஜனின் தூரிகையால் வரையப்பட்டது

**பகை எம் இனத்தைக் கருவிலேயே கொல்ல - நாம்**
**கருத்து வேறுபாடுகளால் எம் விடுதலையைக் கொல்வதோ?**
**விடுதலைக்காய் ஒன்றுபடுவோம் வாரீர் !!!**


பிரித்தானிய தமிழர் பேரவை இன்று - பக்கம் 2-3

புலம்பெயர் பொருளாதார பலத்தை ஒன்றிணைப்போம்- பக்கம் 4

தமிழீழமே இறுதி முடிவு? - பக்கம் 5

அரசியல் வேலைத்திட்டம் - பக்கம் 6-7


working together for peace with justice and dignity

படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானிய தமிழர் பேரவை



பிரித்தானிய தமிழர் பேரவை தனிநபர்கள், தமிழ்ச் சமூக அமைப் புக்கள், ஆதரவாளர்கள், ஆகியோரை ஒன்றிணைத்து, தமிழ் மக்கள் அநுபவிக்கும் மனிதாபிமான நெருக்கடி களையும், அவர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசினால் கட்ட விழ்த்து விடப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டுவரவும், தமிழ் தேசியத்தின் அடிப்படையிலான, தமிழ் மக்களின் சமூக, அரசியல் அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனநாயகப் வழிமுறையில் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும்.

எமது நாட்டில் எமது உறவினர்களுக் கெதிராக, முன்னெப்போதும் இல்லாத வகையில் மேற்கொள்ளப் பட்ட துன்புறுத்தல்களைக் கண்டு 2009ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து பிரித்தா னியாவில் மட்டுமன்றி உலகெங்கிலும் வாழும் புலம் பெயர் தமிழ் மக்கள் மனம் வெதும்பி நிற் கிறார்கள். உலகளாவிய ரீதியில் நாம் பல முயற்சிகளையும் போராட்டங் களையும் முன்னெடுத்தும் சிறீலங்கா அரசினால் எமது மக்களுக கெதிராக மேற்கொள்ளப்பட்ட படுகொலை களை எம்மால் நிறுத்த முடியவில்லை. எமது உறவுகளின் உயிர் இழப்புக்களைக் கண்டு எமது சமூகம் மனச்சோர்வுற்று இருக்கிறது.

இந்நிலையில் புலம் பெயர் மக்கள் பலமாகவும், ஒற்றுமையாகவும், உறுதி யுடனும் எமது விடுதலைக்காகப் போராட வேண்டிய நேரம் இதுவாகும். குரலற்று, உதவிகளற்று வாழும் எமது சகோதரர் களுடைய சிதைந்த வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தோள் கொடுக்க வேண்டிய நேரம் இதுவாகும். எம்மை எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து எமது மக்களின் குரல்களாக நாம் எழுந்து நிற்க்க வேண்டும்.

எமது விடுதலைக்காக தம் இன்னுயிரை ஈர்ந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று தேசிய நினைவு எழுச்சி நாளில் ஒன்றுகூடியுள்ளோம். எமது தாய்நாடு சிங்கள இராணுவதின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடும்வரை இப் போராட்டத்தைத் தொடர்வதென சங்கற்பம் ஏற்பதே இவர்களுக்கு நாம் செய்யும் காணிக்கை ஆகும். தமிழீழ மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட இறையாண்மையை மீளப்பெறும்வரை எமது விடுதலைக்காக தமது உயிர்களை அர்ப்பனித்த மண்ணின் மைந்தர்களின் நினைவுகள் எமது உள்ளத்திலும் உணர்விலும் நிலைத்து நிற்கும்.

### 2009ம் ஆண்டு மே மாதத்திலிருந்து B.T.F முன்னெடுத்த சில முக்கிய செயற்பாடுகள்.

முட்கம்பிவேலிகளின் பின் அடைக்கப் பட்டிருந்த இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலையை வெளிக்கொணர இலண்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டம் – யூன் 2009

பல நாடுகளில் வாழ்ந்த புலம்பெயர் தமிழ் மக்களை ஒன்று சேர்த்து "உலகத் தமிழர் பேரவை" உருவாகக் காரணமாக இருந்தது – யூலை 2009

"வதை முகாங்களை திறவுங்கள்" திறவுகோள் போராட்டம் –ஆகஸ்ட் 2009

முக்கிய அரசியல் கட்சிகளின் பல பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்க வைத்தமை.

– Hon William Hague, கொன்சர்வேட்டிங் கட்சி வதை முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க தூண்டியமை – ஆகஸ்ட் 2009

– சிறிலங்காவிற்க்கான IMF கடன் வழங்குவதில் பிரித்தானிய அரசாங்கம் ஆதரவாக வாக்களிப்பதை தடுத்து நிறுத்த தூண்டியது. ஒக்டோபர் 2009

– ஐரோப்பிய ஒன்றியத்தினால் சிறிலங்காவிற்கு கொடுக்கப்பட்டிருந்த GSP+ இன் நீடிப்புக்கு எதிராக தீவிரமாக முன்னெடுப்புக்கள் (லொபி) செய்தமை .

– பிரித்தானியாவின் ஆளும் கட்சியான தொழிற்கட்சி தமிழர்களுக்கு ஆதரவான தீர்மானமொன்றை தம் கட்சி மகாநாட்டில் நிறைவேற்றியது – ஒக்டோபர் 2009

– அமெரிக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா போர்க்குற்ற விசாரணைக்கு தமிழர்களுக்கான அனைத்து கட்சி பாராளுமன்றக் குழு ஆதரவு தெரிவித்தமை

– வதைமுகாம்களில் மக்கள் அடைக்கப் பட்டு 150ஆவது நாள் பூர்த்தியானதை உலகிற்கு எடுத்துரைக்க லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம். ஒக்டோபர் 2009

### நீங்கள் எவ்விதம் பேரவை செயற் பாடுகளில் இணைந்து கொள்ளலாம்.

– இடம்பெயர்ந்த மக்கள் தம் வாழ்க் கையை மீளக்கட்டியெழுப்புவதற்க்கு உதவுதல்.

– பிரித்தானிய தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தலும். பேரவையின் உறுப்புரிமை பெற ஊக்குவித்தலும்.

– அரசியல்பீடங்கள், ஐநா, போன்ற சர்வதேச நிறுவனங்கள் மத்தியிலும், மக்கள் அமைப்புகள் மத்தியிலும் ஆதரவு திரட்டல்.

– பிரித்தானியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து இயங்குதல். தமிழர்களுக்கான சர்வகட்சி பாராளுமன்றக்குழுவின் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்ய உதவுதல்.

– UK மற்றும் EUவில் உள்ள தொழிளார் சங்களுடன் சேர்ந்து இயங்குதல்.

– சிறிலங்கா புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுத்தல்.

– சிறிலங்காவிற்க்கான GSP+ வரிச் சலுகை மற்றும் IMF கடனுதவி நீடிப்பு போன்றவற்றை தடுத்து நிறுத்த முயற்சி செய்தல்.

– ஊடகங்கள் மூலம் எமது விடுதலை போராட்டத்தை உலகலாவிய ரீதியில் எடுத்துச் செல்லல்.

– வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு இறைமையுள்ள சுதந்திர தமிழீழத்திற்க்கான வாக்கெடுப்பு நடாத்தல்

– சர்வதேச அரசாங்கங்களின் ஆதரவை திரட்டி, உலகலாவிய நண்பர்களை உருவாக்குதல்.

– பொதுநலவாய நாடுகள் அமைப் பிலிருந்து, சிறிலங்காவை நீக்க முயற்சி செய்தல்.

–தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் சட்டவிரோத வெளித்தோற்றத்தை அகற்ற முனைதல்.

– சிறிலங்கா மீது போர்க்குற்ற விசாரணைகளை நடாத்த தூண்டுதல்.

– பிரித்தானியா வாழ் தமிழ் மக்களின் ஜனநாயக் பிரதிநிதிதுவத்துக்கான தேர்தலை நடாத்தல்

– இறைமையுள்ள தமிழ் தேசத்திற்கு உலகளாவிய அரசாங்கங்களிடையே ஆதரவு தேடல்

– புலம் பெயர் தமிழ் மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக உழைத்தல்.

புலம் பெயர் வாழ் தமிழர்களாகிய நாம் எமது அடையாளத்தினாலும், தேசியத்தினாலும் ஒருமைப்படுத்தப்பட்டு பல நாடுகளிலிலும் பரந்து வாழும் ஒரு சமூகமாக விளங்குகிறோம். இவ்வருடம் நடந்த சம்பவங்கள் எமக்கென ஒரு தனி நாட்டை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நியாயப்படுத்தியுள்ளது. எமது அரசியல், சமூக அபிலாசைகளை நாம் வாழும் நாட்டின் அரசாங்கங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் உணரவைக்கும் ஆற்றல் பொருந்தியவர்களாக உள்ளோம்.

ஐக்கிய இராட்சியத்தில் வாழும் தமிழ் மக்களை ஒன்று சேர்த்து எமது சரித்திரம், பாரம்பரியம் ஆகியவற்றை பேண வேண்டிய அவசியத்தை இன்றைய, மற்றும் வருங்கால தலைமுறையினருக்கு உணர்த்தவேண்டிய கடமையில் உள்ளோம். எமது சமூக பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், நிறுவனங்கள், ஊடகங்கள், பொதுமக்கள் ஆகியோடர் மீது எமது செல்வாக்கினை உபயோகிக்க முடியும்.

சமீபகால வரலாற்றின் படி புலம் பெயர் மக்கள் தேசவிடுதலையிலும், நாட்டை கட்டியெழுப்புவதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இதனை பின்பற்றியே ஒரு சுதந்திர தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு மன நிலையை புலம்பெயர் தமிழ் மக்களிடையே ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச அரசாங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் சட்டதிட்டங்களுக்கு அமையவே உலகம் முழுதும் வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைத்து அவர்களது நிறுவனங்களின் பங்களிப்புடன் எமது முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

BTF தனது செயற்பாடுகளை ஐக்கிய இரட்சியத்தில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாண்மையோரின் பங்களிப் புடனும், அவர்களது பிரதிநிதி என்னும் தகுதியுடனுமே முன்னெடுக்க முடியும். புலம் பெயர் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்துவதாலும், தேசிய சர்வதேச அரங்கில் எமது செல்வாக்கை உபையோகிப்பதாலும், எமது சமூக அரசியல் பங்களிப்பை மேம்படுத்துவதாலுமே எமது விடுதலைக்கான போராட்டத்தை அடுத்த நிலைக்கு சனநாயக வழியில் எடுத்துச்செல்ல முடியும்.

1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது சனநாயக ரீதியில் பெறப்பட மக்களின் தீர்ப்பான ஒரு சுதந்திரமான இறையாண்மையுள்ள ஒரு தமிழ்த் தேசத்தை ஆதரிக்கும் எல்லோரையும் தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி BTF அழைக்கிறது. இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் யாவரும்மதிப்புடனும், நீதியுடனும், சமாதானத்துடனும், சுதந்திரமாகவும் வாழும் ஒரு நாட்டை உருவாக்குவதற்காக ஒன்று சேர்ந்து உழைக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

BTF இன் வெற்றி உங்கள் ஒவ்வொருவரது உழைப்பிலும், பங்களிப்பிலும் தங்கி யுள்ளமையால் நீங்கள் யாவரும் இந்த நிறுவனத்தின் உரிமையாளராகி இந்நிறுவனமே பிரித்தானியா வாழ் தமிழ்மக்களின் பிரதிநிதி என்ற நிலைக்கு எடுத்துச்சென்று எங்களது குரலை வலுப்பெற செய்வோம்.

BTF உங்களது நிறுவனம். அதில் பங்குகொண்டு தமிழ்மக்களின் குரலினை வலுப்படுத்துங்கள். அங்கத்தவராக சேர்ந்து அதன் செயற்பாடுகளில் பங்கு பெறுங்கள்.

**’சிறிது தற்காலிக பாதுகாப்பிற்காக அவசியமான சுதந்திரத்தை விட்டுக் கொடுப்பவர்கள் சுதந்திரத்திற்கோ அன்றி பாதுகாப்பிற்கோ அருகதையற்றவர்கள்.’**

**- பென்ஜமின் பிராங்ளின்.**

படிப்பகம்

www.padippakam.com



# BRITISH TAMILS FORUM



**British Tamils Forum is an umbrella organisation, bringing together individuals, Tamil community organisations and well wishers, to highlight the humanitarian crises and human rights violations perpetrated by the Government of Sri Lanka, and to advance the Tamil National cause to fulfil the Tamils' Socio-Political aspirations, through democratic means.**

Since May 2009 the Tamil Diaspora, not just within the UK but around the world, have descended into emotional turmoil in the face of unparalleled suffering inflicted upon our kith and kin back home. Despite our efforts globally we could not stop the massacre of our people by the Sri Lankan state.

There has been a general feeling of despondency within our community in the wake of the unprecedented loss of lives of our kith and kin. However, this is the time for the Diaspora to be strong, united and resolute in our struggle for freedom. Our brethren who are voiceless and helpless at this point in time need our shoulders to hold on, so that they can stand firm and rebuild their shattered lives. We need to face the challenges ahead together and be the voice for our people.

Today we have gathered in unity to observe our National Day of Remembrance to pay homage to those who lost their lives in our struggle for freedom. Our real tribute to the fallen must be our commitment to continue the struggle until our motherland is liberated from occupation by Sri Lanka to reinstate the lost sovereignty of Tamil Eelam.

**BTF activities since May 2009…**

- Organised a mass protest march in London to highlight the plight of IDPs behind barbed wire – Jun 2009
- Came together and was instrumental in uniting the Tamil Diaspora under Global Tamil Forum – inaugurated in Jul 2009
- "Unlock the Concentration Camps" – Key campaign launched – Aug 2009
- Lobbied members of parliament of all the major political parties to act to voice for the Tamil people.
- Rt. Hon William Hague, Conservative Party, highlights Tamils held in camps – Aug 2009
- Successfully lobbied the UK Government against voting for IMF loan to Sri Lanka
- Actively lobbying the UK Government & the EU against extension of GSP+ Trade Concessions to Sri Lanka
- Sitting Labour Party government in the UK passed a resolution in favour of the Tamils with the backing of GMB - UK's General Union – Oct 2009
- All Party Parliament Group for Tamils (APPGT) welcomes US initiatives to investigate war crimes in Sri Lanka
- Protest march in London to mark 150 days in camps – Oct 2009

## But we have a long way to go…

- Helping the IDPs rebuild their lives
- Politicisation of Tamil Diaspora and wider membership of UK Tamils
- Lobby the political establishment, international bodies such as EU & UN and the civil society
- Working with all political parties in the UK & develop activities of APPGT
- Working with Trade Unions in the UK and EU
- Boycott Sri Lanka campaigns
- Prevent extension of GSP+ Trade Concessions and IMF loan to Sri Lanka
- Working with the media to raise global awareness
- Holding a referendum for Independent Sovereign Tamil State based on Vaddukkoddai Resolution
- Lobby International governments and making friends globally
- Establish BTF as a mainstream organisation representing Tamils in the UK
- Expulsion of Sri Lanka from Commonwealth
- Decriminalisation of the Tamil Community
- War Crimes Prosecution
- Democratic representation of UK Tamil Diaspora via electoral means
- International Governments to support Independent Tamil State
- Socio-economic wellbeing of Tamil Diaspora

---

The need to unite the UK Tamil Diaspora, to mobilise the masses in order to preserve our history, heritage and keep the Tamil Nationalism alive in the generations now and in future.

---

We, the Tamil Diaspora, have established ourselves as a transnational community defined by our ethnicity and identity. The need for an independent sovereign state of Tamil Eelam has been further legitimised by the events of this year. As a dynamic Diaspora community who excel in academic and professional fields, we have the capacity, resources and democratic voice to influence the governments and public of our host countries to express our socio-political aspirations.

BTF values the need to unite the UK Tamil Diaspora, to mobilise the masses in order to preserve our history, heritage and keep the Tamil Nationalism alive in the generations now and in future. Through enhancement of our socio-economic standing we can influence the political establishment, civil administrations, non-government organisations, media and the wider public in the UK.

In recent world history, Diaspora has begun to play a more influential role in nation building and in achieving state independence. The Tamil Diaspora is following in these paths, coordinating transnationally, in building consensus globally to achieve international acceptance for an independent state of Tamil Eelam.

BTF plays a pivotal role in the strategic mobilisation of the Tamil Diaspora through its active participation in the global organisations that are being formed with the aim of coordinating our efforts to work more effectively within the international framework and with international governments and institutions.

**How can you contribute…**

BTF can only achieve these objectives through wider participation by the UK Tamil Diaspora and becoming a credible representative body. By politically mobilising the Diaspora, effective national and international lobbying and by strengthening our socio-political standing BTF believes the struggle for freedom can be taken to the next level through democratic means.

BTF invites all those who subscribe to the peoples' democratic mandate of 1977 general elections that called for the reinstatement of an Independent Sovereign Tamil State, to work together towards achieving freedom and peace with justice and dignity for Tamils in the island of Ceylon.

The success of BTF is reliant on your involvement and contribution hence it is vital that each one of us takes ownership of this organisation to take forward the diaspora representation in the UK and strengthen our voice.

*"Those who would give up essential liberty to purchase a little temporary safety deserve neither liberty nor safety"*

***- Benjamin Franklin***

Please contact us for further details:

**British Tamils Forum**
**Tamil House**
Fountayne Business Centre,
Broad Lane,
Tottenham N15 4AG

**Tel: 020 8808 0465**
admin@tamilsforum.com
www.tamilsforum.com

படிப்பகம்

www.padippakam.com



# Chamber of commerce for UK Tamil businesses

It is with great pleasure and optimism we announce inauguration of The Tamil Businesses Association - UK. We take this opportunity to invite all Tamil businesses scattered across the UK, regardless of their size and strength to join hands with us to building and nurture this organisation, formed with the aim of consolidating the economic and financial strength of the Diaspora Tamil community in general and UK in particular.

We believe, the collective strength of Tamil Businesses Association will stand to yield much greater benefit to the individual businesses and to the Tamil community than that could be achieved by the sum of individual businesses in the UK.

Some of the greater benefits that can be potentially enjoyed with a minimum subscription of £50 to The Tamil Businesses Association are outlined below:

- The Tamil Businesses Association can negotiate better discounts on variety of services and products such as insurance, bank charges, mortgages, loans, with major insurance brokers, banks and lenders.

- We can collectively negotiate and even demand major discounts on the merit of our bulk buying power, from wholesalers, for the benefit of our members.

- We can lobby the local councils and the national government, other trade organisations to address the and resolve the common concerns of our members.

- We can pool our business information and make it available for all in our community.

- We can organise informational and educational seminars on business related topics, at a reduced rates, for the benefit of our members.

- Our website would be an interactive tool for exchange of information and networking between businesses for common and mutual interest amongst the members.

- We will provide information on employment opportunities and facilitate recruitment and training of employees.

- Publicise information on expert services from accountants, tax advisers, Solicitors business consultants for the benefit of our members.

- Create a forum for our business community.

- We will engage with Tamil Chambers of commerce around the world and initiate mutually beneficial activities, particularly around import and export businesses to promote a global Tamil business community with a reciprocally network.




Over 280 000 Innocent Tamil civilians - including at least 50,000 children detained in squalid military - run camps in Sri Lanka

Sri Lanka refuses access to aid agencies, international monitors and media inside the Camps



Break Your Silence!
Free the Tamils!

Now YOU hold the key to unlock the camps!
Please help free these Illegally Detained People (IDPs)!
Please contact your MP, MEP, FCO, Prime Minister (www.writetothem.com) and express your strongest protest to these inhumane 'prisons'.

"Over 1400 people die every week within the camps" – Times

"The equivalent of Bournemouth 's population live, eat and sleep in an area the size of Wembley Stadium" – Amnesty International

For more information please visit www.unlockthecamps.org

BTF
020 8808 0465

UNLOCK the Concentration Camps in SRI LANKA
Let's not let history repeat!

www.padippakam.com



# தமிழர்களின் அபிலாசை என்ன? ஜனநாயக முறையில் உலகிற்கு உணர்த்தும் வாக்கெடுப்பு



இலங்கைத் தீவில் பல தசாப்தங்களாக நீடித்து வந்த தமிழர் உரிமை தொடர்பான போராட்டத்திற்கு எவ்வகையிலும் தீர்வு வராத நிலையில் – 1976ம் ஆண்டு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து வட்டுகோட்டையில் தந்தை. செல்வநாயகம் தலைமையில் பிரகடனமொன்றை வெளியிட்டார்கள்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கொண்ட தேசிய இனம் என்பதை வலியுறுத்தி – இதன் அடிப்படையில் – சுதந்திரமான இறைமை கொண்ட தமிழ் ஈழ அரசு ஒன்று ஈழத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான வடக்குக்–கிழக்கு நிலப்பரப்பில் உருவாக்கப்படவேண்டும் என்பது வட்டுகோட்டைப் பிரகடனத்தின் சாராம்சம்.

1977ம் ஆண்டு இலங்கைத் தீவில் நடைபெற்ற பொதுசன வாக்கெடுப்பில் இறைமை கொண்ட சுதந்திர தமிழீழம் என்ற தீர்மானத்தை அடிப்படையாக கொண்டு போட்டியிட்ட தமிழ்க் கட்சி தேர்தலில் மிகப் பெரும்பான்மையான வாக்குக்களை ப்பெற்று உறுதிசெய்யப்பட்டது.

இதன் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையாக இதுவே தொடர்ந்து வந்து இருக்கின்றது.

இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் தமிழீழத்துக்கான அபிலாசையை கைவிட்டு விட்டார்கள் எனக்கூறி அரைகுறைத் தீர்வினை திணிப்பதற்கு சிலசக்திகள் முயற்சி செய்கின்றன.

தாயகத்தில் தமிழ்மக்களின் குரல்வளை நசிக்கப்பட்ட நிலையில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்மக்கள் சுதந்திரமான, இறைமை கொண்ட தமிழீழம் என்ற தீர்மானத்தை வலியுறுத்தல் வேண்டும்.

தீர்மானம் பற்றிய விளக்கங்களை அந்நாட்டு அரசு மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் புரியவைத்து – அந்த நாட்டு பிரதான ஊடகங்களின் ஊடாக இத்தீர்மானம் பற்றிய பின்னணியை வெளிக்கொண்டுவந்து தாங்கள் வதியும் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

இறைமை கொண்ட சுதந்திர தமிழீழம் மீதான வாக்கெடுப்பை நடத்தி எமது விருப்பை சர்வதேசத்துக்கு கூறவேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைக்கு மாறான அரைகுறைத் தீர்வினை எங்கள் மீது திணிக்க வேண்டாம் என்று இதன் மூலம் சர்வதேசத்தினை ஜனநாயக வழியில் நிர்ப்பந்திக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானிய தமிழர் பேரவையின்

# அரசியல் வேலைத் திட்டம் (இறுதி வரைபு - 28.06.2009)




நாட்டிலே இன்று உருவாகியிருக்கின்ற புதிய சூழ்நிலையை கருத்திலே கொண்டு நாம் பிரித்தானியவில் ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கின்ற வகையில் வளர்த்தெடுப்பது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது. இந்த அரசியல் கட்டமைப்பு பிரித்தானியவில் வாழ்கின்ற தமிழ் ஈழ மக்களை அரசியல் வேலைத்திட்டங்களுக்கு உரிய முறையில் நிறுவன ரீதியாக வளர்த்தெடுத்து தாயகத்திலே எமது மக்களின் நியாயமான போராட்டத்துக்கு தமிழர் அல்லாத மக்களின் தார்மீக ஆதரவை வென்றெடுப்பதும் இந்த நாட்டின் அதிகார பீடத்தோடு தொடர்ச்சியான திட்டமிட்ட வேலைத் திட்டத்துக் கூடாக அவர்களின் ராஜதந்திர ரீதியான ஆதரவை வென்றெடுத்து செயற்படுவதற்கும் உரிய முறையில் நேர்த்தியாக திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளது.

சனநாயகம் (Democracy), வெளிப்படைத் தன்மை (Transparency)சட்டத்திற் குட்பட்ட செயற்பாடு (Legality), கணக்குக் காட்டும் தன்மை (Accountability), அடிப்படை அரசியல் தளத்திலிருந்து கட்டியெழுப்புதல் (Grass Root), பரஸ்பர மரியாதை, கலந்து பேசி கூட்டாக முடிவெடுத்தல் போன்றவற்றை இந்தக் கட்டமைப்பு அடிப்படை விழுமியங்களாக கொண்டிருக்கும். முடிவெடுக்கும் வழிமுறை பல்வேறு மட்ட மக்கள் கட்டமைப்புக்களுக்கு பாரப்படுத்தப்படும்.

இந்த கட்டமைப்பு பிரித்தானியவில் வாழ்கின்ற தமிழ் மக்களை ஒரு வலிமைமிக்க சமூகமாக வளர்த்தெடுப்பதற்கு தேவையான சமூக பொருளாதார வேலைத் திட்டங்களையும் உரிய முறையில் திட்டமிட்டு முன்னெடுக்கும்.

## இலக்கு

உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களை வலிமை மிக்க சமூகமாக உயர்த்துதல். அதன் அடிநாதமாக தாயகத்தில் தேசியம், இறைமையுடன் கூடிய தன்னாட்சியை நிறுவுதல்.

## குறிக்கோள்கள்:

1) இவ்விலக்கை அடைவதற்காக பிரித்தானிய தமிழ் மக்களை அமைப்பு ரீதியாக நிறுவன மயப்படுத்துதல்

2) பிரித்தானியாவில் உள்ள தமிழர் அல்லாத மக்களை மேற்படி இலக்குக்காக வென்றெடுத்தல்.

3) இந் நாட்டின் அதிகார மையங்களை வென்றெடுத்தல்.

4) மேற்படி இலக்கை அடைவதற்காக ஒரு பொது நிதியத்தை சட்டரீதியாக உருவாக்குதல்.

## செயற்பாடுகள்

(1) மக்களை திரட்டுதல் (Mobilisation)

(2) அரசியல்வாதிகளின் ஆதரவை தேடுதல் (Lobby)

(3) ஊடகம் (Media)

(4) மூலோபாயம் (Strategy)

(5) உரிமைக்குழு (Rights Group)

(6) ஒருமைப்பாட்டுக் குழு (Solidarity Group)

(7) சட்டக்குழு (Legal Team)

(8) தமிழரல்லாத கல்விமான்களுக்கான குழு (Academic Activities)

(9) இனப்படு கொலையை வெளிக் கொணரும் குழு (Genocide Team)

(10) சமூகக் கட்டுமானங்களுக்கான குழு (Socio Economic Development)

(11) புனர்வாழ்வு (தேசம்)

(12) அபிவிருத்தி (தேசம்)

(13) இளையோர் (Youth Group)

(14) பெண்கள் (Women Group)

(15) அலுவலக நிர்வாகம் (Back office) போன்றவை பிரதான செயற்பாடுகளாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

இப்பிரதான பணிகளை இணைக்கின்ற இணைப்பாளர்களைக் கொண்ட ஒரு செயற்குழு கிரமமாக கூடி கலந்து பேசி முக்கியமான முடிவுகளை எடுக்கும்.

### (1) மக்களை திரட்டுதல் (Mobilisation)

இதுவே எமது அரசியல் வேலைத் திட்டத்தின் அடித்தளமாகும். எமது அரசியல் வேலைத் திட்டத்தை பாராளு மன்றத் தொகுதியை அடிப்படையாக வைத்து முன்னெடுக்கப்படும்.

ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியிலும் பொருத்தமானவர்களைக் கொண்ட ஒரு குழு மக்களைத் திரட்டும் பணிக்காக அமைக்கப்படும். அந்தக் குழு அந்த தொகுதி வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வீடு வீடாக சென்று மக்களைச் சந்திக்கும். 18 அகவைக்குக் கூடிய அனைவரும் அரசியல் வேலைக்காக நாம் அமைக்கின்ற அமைப்பின் நோக் கங்களை ஏற்று அங்கத்தவர்களாக உள் வாங்கப்படுவார்கள். ஆரம்பத்தில் இடைக்கால அடிப்படையில் தேர்வு செய்யப்படும் இம்மக்கள் மன்ற பிரதிநிதிகள, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தொகுதியில் உள்ள பெரும்பான்மையான தமிழ் மக்களை அங்கத்தவர்களாக உள் வாங்க வேண்டும். அடுத்து வரும் கால கட்டத்தில் அத் தொகுதி (Constituency), பிராந்தியத்துக்கான (Region) பிரதிநிதிகள் சனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்படுவர்.

### (2) அரசியல்வாதிகளின் ஆதரவை தேடுதல் (Lobby)

ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள எமது மக்களைக் கொண்ட ஒரு ஆதரவு தேடும் குழுவை அமைத்து அவர்களுக்கூடாக அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரையும் ஏனைய முக்கிய வேட்பாளர்களையும் நகர சபை உறுப்பினர்களையும் தொடர்ச்சியாக சந்தித்து அவர்களின் மனங்களை வெல்ல வேண்டும். வென்றெடுத்த பாராளுமன்ற உறுப்பினர்களை ஆதரவுக் குழுவில் இணைத்து (All Party Parliamentary Group) எமக்காக தொடர்ந்து குரல் கொடுக்க வைக்க வேண்டும்.

அரசியல் பீடத்தில் உள்ளவர்களையும் கொள்கை வகுப்பாளர்களையும் தொடர்ச்சியாக சந்தித்து அவர்களை வென்றெடுக்கக் கூடிய வல்லமை கொண்ட கொள்கையில் இறுக்கமான எம்மவர்களை கண்டறிந்து செயற்படுதல். இதற்கு தேவையான அறிவையும் ராஜதந்திரங்கள் மற்றும் ராஜதந்தர உலகம் எப்படி இயங்குகின்றது போன்ற பயிற்சிகளையும், கலந்துரையாடல்களையும் நடாத்துதல்.

### (3) ஊடகம் (Media)

எமது மக்களை அறிவூட்டி, தெளிவூட்டி, தெரியப்படுத்தி, உற்சாகப்படுத்தி எமது போராட்டத்துடன் நெருக்கமாக வைத்திருப்பதற்காக திட்டமிட்டு தொழில்நுட்ப வளத்தை சரியாக பயன்படுத்தி ஊடகப் பணியினை மேற்கொள்ளுதல். இதற்கு தேவையான திறன், அநுபவம், ஈடுபாடு உள்ளவர்களை கண்டறிந்து உள்வாங்கி செயற்படுதல். முடிந்தவரை எல்லா ஊடகங்களோடும் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக் கூடாகவும் எமது பணியினை முன்னெடுத்தல். சர்வதேச ஊடகங்களை கையாளக் கூடய திறமையுடையவர்களை இனங்கண்டு பயிற்சி பட்டறைகளுக் கூடாக அவர்களை வளர்த்தெடுத்தல்.

### (4) மூலோபாயம் (Strategy)

நாம் எந்த செயற்திட்டங்களை முன் எடுத்தாலும் சரியான மூலோபாயங்களை முற்கூட்டியே அதற்குரியவர்களை கண்டறிந்து உள்வாங்கி கலந்து பேசி முடிவெடுத்து அதன்படி காரியங்களை ஆற்றுதல். இந்த மூலோபாயத்துக்கு தேவையான ஆய்வுகளை செய்வதற்கான தனித்தனிக் குழுக்களை அமைத்தல். அத்தோடு சிந்தனையாளர் குழு (வூாைமெ வயமெ) அமைக்கப்பட்டு அவர்களது ஆலோசனைகள் பாிந்துரைகள் பாிசீலிக்கப்பட்டு சரியானவறறை எடுதது மூலோபாயம் நேர்த்தியாக்கப்படும்.

### (5) உரிமைக்குழு (Rights Group)

உரிமைக் குழுக்களின் செயற்பாடும் செல்வாக்கும் கனதியானது. அந்த அடிப்படையில் அவர்களையும் எமது உரிமைக்காக குரல் கொடுக்க வைப்பதற்காக அதற்கு பொருத்தமான எம்மவர்களை கண்டறிந்து, தரவு திரட்டி, செயற்திட்டம் வகுத்து, உரிமைக் குழுக்களை எமது பக்கம் வென்றெடுத்தல்.

### (6) ஒருமைப்பாட்டுக் குழு (Solidarity Group)

இங்கு தமிழ் மக்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக இருப்பதால் தனித்து எம்மக்கள் அதிகார பீடங்களின் கொள்கைகளில் மாற்றங்களை கொண்டு வருவது கடினம். எனவே பிரித்தானிய மக்களையும் அமைப்புக்களையும் நட்புச் சக்திகளாக மாற்றி, தமிழீழ மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கு அவர்கள் மூலம் எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அதிகார பீடங்கள் கொள்கை வகுப்பாளர்கள் மீதும் செல்வாக்கு செலுத்த வைக்க வேண்டும். அத்தோடு உலகப் பரப்பெங்கும் ஒடுக்கப்படும் மக்கள் அமைப்புக்களோடு பொது வேலைத் திட்ட அடிப்படையில் ஒருமைப்பாடு ஏற்படுத்தப்படும்.

### (7) சட்டக்குழு (Legal Team)

நாம் முன்னெடுக்கின்ற எல்லா முயற்சிகளும் சட்டத்துக்கு முரண்படாத வகையில் அமைவதனை இக்குழு உறுதிப்படுத்தும். எமது போராட்ட முன்னெடுப்புக்களின் போது ஏற்படக் கூடிய சட்டச் சிக்கல்களை எதிர் கொண்டு தீர்வு காண்பது, நாட்டு அல்லது சர்வதேச மன்றங்களில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை வடிவங்களை எடுத்துச் சென்று (Genocide, War Crimes) நீதி கோருவது. அதற்கு தேவையான திறன், அநுபவம், ஈடுபாடு உள்ளவர்களை கண்டறிந்து உள்வாங்கி செயற்படுவது.

### (8) தமிழரல்லாத கல்விமான்களுக்கான குழு (Academic Activities)

பல்கலைக் கழக மற்றும் உயர் ஆய்வு நிறுவனங்களில் உள்ள கல்விமான்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உரிய வடிவங்களூடாக அவர்களுக்கு எமது போராட்டத்தின் தர்க்க ரீதியான நியாயத்தை அறிய வைத்து அவர்களுக்கூடாக இந்த நாட்டு மக்களையும் கொள்கை வகுப்பாளர்கள் மீதும் செல்வாக்கு செலுத்துதல்.

### (9) இன அழிப்பை வெளிக்கொணரும் குழு (Genocide Team)

இதுவும் எமது அரசியல் வேலைத் திட்டத்தில் ஒரு முக்கிய செயற்பாடாக அமையும். 61 ஆண்டுகளுக்கு மேலாக

www.padippakam.com



நடைபெறும் இனப்படுகொலையை நிரூபிக்கும் முகமாகவும் அதனை இந்த உலகம் ஏற்றுக்கொள்ள வைக்குமுகமாகவும் இக்குழுவின் செயற்பாடு அமையயும். இந்தக் குழுவிலும் தகைமைசார் வல்லுநர்கள் பலர் சேர்ந்தியங்க வேண்டும். இனப்படுகொலையை நிறுவுவதற்கான ஆதாரங்களை திரட்டுதல், அதனை நிரூபிக்கும் வகையிலான வெளியீடுகளை கச்சிதமாக வெளிக்கொண்டு வருதல், இனப்படுகொலையை வெளிப்படுத்தும் கண்காட்சிகளை தொகுதிகள் தோறும் நடாத்தி தமிழர் அல்லாதவர்களின் ஆதரவினைப் பெறுதல், இனப்படுகொலையினை வெளிப்படுத்தும் இணையத் தளத்தினை உருவாக்கி அதனை கையாளுதல். இனப்படுகொலைக்கு முகங்கொடுத்த ஏனைய சமூகங்களோடு இணைந்து செயற்படுதல், இனப்படுகொலைக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை அணுகி அவர்களின் ஆதரவினை வென்றெடுத்தல் போன்ற செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ளப்படும்.

### (10) சமூகக் கட்டுமானங்களுக்கான குழு (Socio Economic Development)

பிரித்தானியாவில் எமது மக்களை சமூக பொருண்மிய ரீதியாக மேம்பாடடையச் செய்து வலிமைமிக்க சமூகமாக தொழில், கல்வி, பண்பாடு, உடல்வளம் போன்ற இன்னோரன்ன விடயங்களில் வளர்த்தெடுப்பதற்கான செயற்பாடுகளை உருவாக்குதல். அதற்கு தேவையான நிறுவனக் கட்டமைப்புக்களை உருவாக்குதல். எமது மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகளை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்தல். இதன் மூலம் ஒரு அறிவுசார் சமூகத்தைக் (Knowledge based Society) கட்டியெழுப்புதல்.

**தமிழ் மக்களை வலிமை மிக்க சமூகமாக உயர்த்துதல். அதன் அடிநாதமாக தாயகத்தில் தேசியம், இறைமையுடன் கூடிய தன்னாட்சியை நிறுவுதல்.**

### (11) புனர்வாழ்வு (தேசம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ் நிலையால் உளவியல் பாதிப்புக்குள்ளாகி முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருக்கும் எமது மக்களின் அவல நிலையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் இலாபமடைய பேரினவாதிகளும் சில தமிழ்க் குழுக்களும் முயற்சி செய்கின்றனர். இந்த நிலையில் எமது மக்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுப்பதற்கு தேவையான மார்க்கங்களையும் வழி வகைகளையும் கண்டறிந்து செயற்படுவது காலத்தின் கட்டாயமாகவும் அரசியல் தேவையாகவும் மாறியுள்ளது.

### (12) அபிவிருத்தி (தேசம்)

அபிவிருத்தி என்ற பெயரில் சிறீலங்கா அரசாங்கம் தமிழீழப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் தனது நாசகார திட்டங்களான விவசாயம், கைத்தொழில், இராணுவக் குடியேற்றங்கள் மற்றும் குறிப்பாக எண்ணெய் அகழ்வுசார் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவார்கள். அதனை நாங்கள் நேரடியாக தடுத்து நிறுத்துவது கடினமாக இருக்கும். வெளிநாடுகளில் அதற்கான மாற்று நடவடிக்கைகளை அபிவிருத்தி என்ற பெயரில் நாங்கள் வெளிநாட்டு அரசுகள் நிறுவனங்கள் மூலம் எடுத்தால் மட்டுமே தற்போதைய நிலையில் அதனை ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்த முடியும். அபிவிருத்தி என்ற பெயரில் நடக்கவிருக்கும் சிங்கள மயமாக்கலை ஊடகம் மற்றும் சூழல் பாதுகாப்பு குழுக்கள் கல்விமான்கள் ஊடாக கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தவதன் மூலம் வெளிநாடுகளும் சிங்கள அரசுக்கு உடந்தையாவதை முடிந்தவரை குறைக்கவேண்டும். அத்தோடு எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் தமிழீழ தேசத்துக்கான நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களையும் அதற்கான மூலோபாயத்தையும் வகுக்க வேண்டிள்ளது. இந்த அடிப்படையில் ஏராளமான கல்விமான்கள், புலமைசார் தொழில் புரிவோர், தொழில் முனைவோர், இளையோர் ஆகியோரை எதிர்காலம் பற்றி நம்பிக்கையூட்டி எமது கட்டுமானங்களில் இணைக்கக் கூடியதாக இருக்கும்.

### (13) இளையோர் (Youth Section)

அரசியல் வேலைத் திட்டங்களில் இளையோரின் பங்களிப்பு மிக அவசிய மானது. அரசியல் வேலைத் திட்டங்களை தமது சக இளையவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும் பாடசாலைகளிலே பல் கலைக்கழகங்களிலே தமிழர் அல்லாத தமது நண்பர்களிடையே அதனை கொண்டு செல்வதற்கும் இளையவர்களின் பங்களிப்பு மிக அவசியமானது. அத்தோடு இந்த நாடுகளின் மொழி வளம், அவர்களை அவர்களின் முறைகளிலேயே கையாளும் பாங்கு, ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அவர்களுக்கிருக்கும் ஆளுமை, எடுத்த காரியங்களில் காட்டும் பற்றுறுதி என்பன அரசியலில் அவர்கள் வகிக்க வேண்டிய பங்கிற்கு சான்று. எங்கள் எல்லா அரசியல் வேலைத் திட்டங்களிலும் சரியான மனப்பக்குவமுடைய இளையவர்களையும் உள்ளடக்கி அவர்களுக்கான அரசியல் அநுபவத்தையும் பக்குவத்தையும் திறனையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

### (14) பெண்கள் (Women Section)

பிரித்தானியாவில் ஏராளமான பெண்கள் அமைப்புக்கள் உள்ளதாலும் பெண்ணுரிமைகள் சம்பந்தமான பிரச்சனைகள் முக்கியத்துவம் கொடுக்கப் படுவதாலும் அந்தப் பெண்கள் அமைப்புக்களை வென்றெடுப்பதற்கும் எமது நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை இவர்கள் மூலமாக வெளிக் கொண்டு வருவதற்கும் இப்பிரிவு அவசியமானது. அந்தந்த நாட்டிலுள்ள தமிழ்ப் பெண்களை முடிந்தவரை உள்வாங்கி எமது அரசியல் வேலைத் திட்டங்களில் அவர்களை வளர்த்தெடுத்து இயலுமான வரை பொறுப்புக்களை கையளிப்பது.

பிரித்தானிய தமிழர் பேரவையினராகிய நாங்கள் புலம்பெயர் பிரித்தானிய வாழ் தமிழ் மக்களின் ஒத்துளைப்போடு தமிழ் தேசியம் நோக்கிய இந்த பயணத்தில்தில் சகல மக்களும் முழுமை யாக கலந்து கொண்டு தேசத்தின் ஈடுபட வேண்டும்.









## இலங்கை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் பதிவு

முழு உலகினையும் ஏமாற்றி விட்டு - உதவி வழங்கும் நாடுகளின் வேண்டுகோளையும் உதறித்தள்ளி

50,000 தமிழ் உறவுகளின் உயிர்களை பலி எடுத்து - 35,000 த்துக்கும் கூடுதலான தமிழர்களை படுகாயப்படுத்தி

300,000 தமிழர்களை - தடுப்பு முகாம்களில் அடைத்துவைத்து - 15,000 த்துக்கும் கூடுதலான இளைஞரையும் இளம் பெண்களையும்

வதைமுகாம்களில் சித்திரைவதை செய்து கொண்டிருப்பவர்களை - வார்த்தைகளால் விபரிக்க முடியாத கொடுமைகளை செய்துகொண்டிப்பவர்களை

உலகில் உள்ள அனைத்து போர்க்குற்றங்களையும் - எம் உறவுகளின் மேல் புரிபவர்களை

அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டாமா?

ரூவாண்டாவில், சிலோவேனியாவில் இனப்படுகொலைசெய்தவர்களை

அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள்.

தண்டனையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

அன்பான புலம்பெயர் தமிழ் உறவுகளே! சோர்ந்திருக்கும் நேர மல்ல - இது

நாம் சேர்ந்திருக்க வேண்டிய நேரம் நாம் - செயற்படவேண்டிய நேரம்

இலங்கை அரசபடைகளின் அட்டூழியத்தால் உங்கள் உறவுகளைப் பறிகொடுத்திருந்தாலோ, உங்கள் உறவுகள் ஊனமாக்கப்பட்டிருந்தாலோ, காணாமற் போயிருந்தாலோ அல்லது அகதி முகாம் என்ற பெயரில் இயங்கும் வதைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலோ தயவுசெய்து பின்வரும் தொலைபேசி எண்களில் எம்மை தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

020 8808 0465 | infouk@cwvhr.org

மேலதிக விபரங்களுக்கு

www.cwvhr.org

www.padippakam.com

*Advertisement*

# TAMIL BUSINESSES ASSOCIATION - UK

*For All your Business Needs*
*Join Forces with other*
***Tamil Businesses in the UK***

Tamil Chamber of Commerce

HELP
WORK
PROSPER
TOGETHER

Contact:
www.tamilbiz.co.uk
020 3370 2934

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"

"Tamil House" Unit 1, Fountayne Business Centre, Broad Lane, London N15 4AG

படிப்பகம்